CC.73/2021 Dt: 18.12.2024.

எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.6108/2024 Dt–08.11.2024 ம் தேதி அனுமதிக்கப்பட்டு அ.சா.1 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of December 2024.

18.12.2024

அ.சா.1–பிரேமலதா

(எதிரி ஆஜர்,).

குறிப்பு: சாட்சி 27.11.2023 ம் தேதி முதல் விசாரணையில் கூறிய சங்கதிகள் நினைவூட்டலுக்கு பின்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

1) எனது சொந்த ஊர் கீழக்கன்னிச்சேரி ஆகும். நான் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் ஆங்கிலத்தில் தான் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். சம்பவம் 16.02.2020 ம் தேதி மதியம் 01.00 மணிக்கு நடைபெற்றது. எனக்கு தேதி சரியாக ஞாபகமில்லை. சம்பவம் நடைபெற்றபோது எனது கணவர் அ.சா.2 அங்கு இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற சமயத்தில் நானும் எதிரியும் மட்டும் தான் இருந்தோம் வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். எனது கணவர் அ.சா.2 க்கு நான் சொல்லிதான் விவரம் தெரியும் என்றால் சரிதான்.

2) எனக்கு எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை முன்பே இருந்தது என்றால் சரிதான். எதிரி வெளிநாட்டில் இருந்தபோது என்னிடம் பணம் எதுவும் கொடுத்து வைப்பார் என்றால் இல்லை. நான் வழக்கிற்காக எதிரி என்னிடம் பணம் ஏதும் கொடுக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும், எதிரி வெளிநாட்டில் இருக்கும்போது எனக்கு தான் பணம் அனுப்பி வைப்பார் என்றாலும் சரியல்ல. எதிரி வெளிநாட்டில் இருந்தபோது கொடுத்த பணத்தை என்னிடம் திரும்ப கேட்டதற்கு நான் தரமாட்டேன் என்று கூறவிட்டேன் என்றால் சரியல்ல. அது தொடர்பாக எதிரி என்மீது புகார் கொடுக்க சென்ற சமயத்தில் நான் எதிரியை மறைத்து அடித்துவிட்டேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் நான் வாங்கிய பணத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு எதிரி மீது புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

3) இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியதுபோல் எதிரி எனது சேலையை பிடித்து இழுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

CC.73/2021 Dt: 18.12.2024.

எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.6108/2024 Dt–08.11.2024 ம் தேதி அனுமதிக்கப்பட்டு அ.சா.2 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of December 2024.

18.12.2024

அ.சா.2–டேவிட்பால்

(எதிரி ஆஜர்,).

குறிப்பு: சாட்சி 27.11.2023 ம் தேதி முதல் விசாரணையில் கூறிய சங்கதிகள் நினைவூட்டலுக்கு பின்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

1) நான் சம்பவ சமயத்தில் அந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான். 14.02.2020 ம் தேதி நடந்த சம்பவத்தில் நான் இல்லை. அ.சா.1 பிரேமலதா எனது மனைவி என்றால் சரிதான். இந்த பிரச்சனை சம்பந்தமாக ஊர் பொதுமக்கள் தான் எனக்கு தகவல் கொடுத்தார்கள். அ.சா.1 எனது மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.